Registered as a Newspaper

Shabwa -

87 A/L
விலங்கியல்
ஆசிரியர்:
நாகநாதன்
WEEKEND CLASSES
Monday Friday
8-30 a. m.
DAY CLASSES
Monday - Friday
10-30 a. m.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

உதயன்

விலை:
ரூ. 1-25

88 A/L
வெப்பவியல்
[HEAT]
ஆசிரியர்:
திரு. வர்ணம்
ஆரம்பம்:
04-07-87 Sat 12-00 a. m.
New Master
INSTITUTE
Navalar Road, Jaffna.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஹூ ஆனி மீ 19 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 6 (03 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 187

மக்களின் பாதுகாப்பு

உறுதிப்படுத்தப்படும் வரை

பேச்சுக்குப் போகமாட்டோம்

பி. பி. ஸி. தமிழோசைக்கு

கூட்டணித் தலைவர் சிவா பேட்டி

லண்டன், ஜூலை 2

தமிழ் மக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டு, அவர்கள் அமைதியாக வாழக்கூடிய சூழ்நிலையை உறுதிப்படுத்தும்வரை நாம் அரசோடு எவ்வித பேச்சுவார்த்தைக்கும் போகமாட்டோம்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. மு சிவசிதம்பரம் லண்டன் ''தமிழோசை''க்கு இன்று அளித்த விசேட பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

இந்தியப் பங்களிப்பு இல்லாத எந்த பேச்சுக்களிலும் நாம் கலந்துகொள்ளப்போவதில்லை. எந்தப் பேச்சுவார்த்தையாக இருப்பினும் அங்கு ஏற்படும் தீர்வை அமுல் செய்வதற்கு இந்தியா பொறுப்பேற்றால் மட்டுமே நாம் அதில் கலந்துகொள்வோம் — என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழோசைப் பேட்டியில் திரு. சிவசிதம்பரம் கூறியதாவது;—

வடக்கு, கிழக்கில் இடைத்தேர்தல்கள் நடத்தப்படும் என்று திரு. ஜெயவர்த்தன அறிவித்திருப்பது உலக மக்களை ஏமாற்றும் ஒரு நடவடிக்கை ஆகும்.

வடக்கு, கிழக்கைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அங்கு இல்லை. அவர்கள் தங்கள் சொந்த இடத்திற்குத் திரும்புவதற்கான சூழ்நிலையும், அமைதியும் அங்கு இல்லை.

இந்தச் சூழ்நிலையில் எப்படி தேர்தல்களை நடத்துவது என்று எனக்கு விளங்கவில்லை.

தமிழ்ப்பகுதிகளில் தேர்தல் ஏன்?

தேசிய ரீதியில்தேர்தல்களைப் பின்போடவேண்டும் என்று கூறும் ஜெயவர்த்தன ஏன் தமிழ் பகுதிகளில் மட்டும் தேர்தல்களை நடத்த வேண்டும் என அவாக்கொள்கின்றார் என்பதும் எனக்கு விளங்கவில்லை.

தனது வழமையான பாணியில் தன்னை நேர்மையானவன் என உலகிற்குக் காட்ட அவர் (4ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



ஓட விட்டுச் சுட்டுப் போட்டு, தப்பி ஓடிச்சினம் நாம் சுட்டோம் எண்டு கதையை மாத்துவினம். அவ்வளவு தானே!......

சுபநேரம்

03-07-1987
வெள்ளிக்கிழமை
சுபநேரம்:-
5.57 முதல் 7.27 வரை
ராகுகாலம்:-
10.27 முதல் 11. 57வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஆனி உத்தரம்

7 பெண்கள் உட்பட 215 பேர் பூஸாவில் இன்னும் தடுத்துவைப்பு

வடமராட்சி, ஜூலை 3

வடமராட்சித் தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பூஸா முகாம் கொண்டுசெல்லப்பட்ட தமிழர்களில் 215 பேரைத்தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டுவிட்டனர்.

புதன்கிழமை 500பேர் விடுவிக்கப்பட்டனர்.

தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களில் ஏழு பேர் பெண்கள்.

அவர்கள் பெயர்கள் வருமாறு:

1 மார்க்கண்டு யோகரஞ்சிதம் புலோலி தெற்கு, 2. ஞானசிகாமணி கெங்காதேவி வல்வெட்டித்துறை.

3. குமாரசாமி இந்திரகுமாரி பருத்தித்துறை, 4. சுப்பிரமணியம் சிறிஸ்காந்தராணி அல்வாய் வடக்கு, 5. சிவலிங்கம் சுஜித்தா புலோலி கிழக்கு.

6. காத்திகேசு சாந்தாமணி (அல்லது) சாந்தி (அல்லது) வித்தியா மணல்காடு, 7. சின்னராசா விநோதினி புலோலி கிழக்கு, (இ-எ)

குடிவரவு விதிகளை கனடா தளர்த்தவில்லை

தூதரக அதிகாரி விளக்கம்

கொழும்பு, ஜூலை 3

கனடா அரசு தனது குடிவரவு விதிகளைத் தளர்த்தவில்லை.

தளர்த்தப்பட்டதாக தமிழ் மக்கள் மத்தியில் பரவிய வதந்திகளை கொழும்பில் உள்ள கனேடிய தூதரகம் மறுத்துள்ளது.

முன்னர் போன்று இருப்தியுள்ள ஆவணங்களை (ஆதரிப்பவரின் கடிதம்-SPONSOR'S LETTER) சமர்ப்பித்தால் மட்டுமே கனடா செல்ல விஸா வழங்கப்படும்.

—இப்படி கனேடியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தூதரகம் முன்னால் தமிழ் மக்கள் குவிந்து காணப்படுவதால் அவர்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே ''விசாரணை விண்ணப்பப் பத்திரங்கள்'' வழங்கப்படுகின்றன.

ஆகவே வீண் வதந்திகளை மட்டும் வெறுமனே நம்பி தமிழர்கள் தூதரக வாசலில் வந்து கூடுவதில் பயன் ஏதுமில்லை.

—இப்படிக் கொழும்பில் உள்ள கனேடியத் தூதரக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-ஐ-எ)

கோவில் மடமும் தர்மகர்த்தா வீடும்

வடமராட்சியில் அரச படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேஷன் லிபரேஷன்' இராணுவ நடவடிக்கைகளின் போது வல்வெட்டித்துறை அம்மன் கோவிலுக்குமுன்பாகவுள்ள மடம் ஒன்றும் விமானத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமுற்றது. அதனை மேற்படத்தில் காணலாம்.

வல்வை சிவன்கோவிலுக்கு அருகில் உள்ள தர்மகர்த்தாவின் வீடு விமானத்தாக்குதலுக்கு இலக்காகி தரைமட்டமாகி இருப்பதைக் கீழ்ப் படத்தில் காணலாம். (படங்கள்:- ஜெயம்)

நாளைய சஞ்சீவியில்---

இராணுவத் தாக்குதலின் பின்னர் முதலில் வடமராட்சி சென்ற செய்தியாளர்கள் எழுதும் சிறப்புக் கட்டுரையை (படங்களுடன்) நாளைய சஞ்சீவியில் படிக்கத் தவறாதீர்கள்.

மூதூரில் தேடுதல் நடத்தியோர்

தமிழ் இளைஞரை ஓடவிட்டுச் சுட்டனர்

திருகோணமலை, ஜூலை 3

தேடுதல் நடத்தச் சென்றவர்கள் தமிழ் இளைஞர் ஒருவரை ஓடச் சொல்லி விட்டு சுட்டனராம்.

- இப்படி திருகோணமலை பிரசைகள் குழுவுக்குமுறையிடப்பட்டுள்ளது.

மூதூர், மாவடிச் சேனைக் கிராமத்தில் கடந்த 25ஆம் திகதி தேடுதல் நடத்த ஆயுதப் படையினர் சென்றனர்.

இந்த அதிகாலைத் தேடுதலின்போது படையினர் 15 இளைஞர்களைக் கைது செய்தனர்.

அவர்களில் ஓர் இளைஞரை ஓடச்சொல்லி விட்டுச் சுட்டனராம்.

காயமடைந்த சின்னத்தம்பி மனோகரன்(வயது 23) என்ற அந்த இளைஞரையும் பின்னர் படையினர் அழைத்துச் சென்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்களின் உறவினர்கள் திருமலை பிரசைகள் குழுவிடம் இது சம்பந்தமாக முறையிட்டனர். (உ-எ-150)

பூஸாவிலிருந்து மேலும் 500 இளைஞர் விடுதலை

இம்முறை அடையாளக் கார்ட்டும் வழங்கப்பட்டது

பலாலி, ஜூலை 3

பூஸா முகாமில் இருந்து கடந்த திங்கட்கிழமையும் 500 இளைஞர்கள் விடுவிக்கப்பட்டனர். இவர்கள் செவ்வாயன்று வடமராட்சி வந்து சேர்ந்தனர்.

University U. S. A. என்ற பெயர் பொறித்த ரீசேர்ட்டும் சாரமும், அடையாளக் கார்ட் ஒன்றும் தமக்கு வழங்கப்பட்டதாக பத்தமேனியைச் சேர்ந்தவரும், வல்வெட்டித்துறைக் கடை ஒன்றில் வேலைசெய்துகொண்டிருந்தபோது பிடிபட்டவருமான இளைஞர் ஒருவர் தெரிவித்தார்.

குளிக்கவும், இயற்கைக் கடன் கழிக்கவும் 10 நிமிடங்கள் மட்டும் தமக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவித்த இந்த இளைஞர் தம்முடன் பிடிபட்டவர்களில் 215 பேர் மிசுத் தண்டிக்கப்பட்டும், சித் (4ஆம் பக்கம் பார்க்க)

அமைச்சர் வின்சன்ட் ராஜினமா!

கொழும்பு, ஜூலை 3

அமைச்சர் வின்சன்ட் பெரேரா அமைச்சர் பதவியையும் எம். பி. பதவியையும் ராஜினமாச் செய்துவிட்டார்.

நாடாளுமன்ற விவகார அமைச்சர் பதவியை வகித்துவந்த திரு.வின்சன்ட் பெரேரா கொழும்பு வடக்கு எம். பி.யாகவும் விளங்கினார்.

கொழும்பு மாநகர ஐ தே க. வேட்பாளர் பட்டியலில் தமது ஆதரவாளர்கள் இடம் பெறாததே அமைச்சரின் ராஜினமாவுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது. (இ-எ)

உடுப்பிட்டியில் நேரடிச் சமர்

வடமராட்சி, ஜூலை 3

உடுப்பிட்டிச் சந்தியில் நேற்று சிப்பாய்கள்—புலிகள் நேரடி மோதல் இடம் பெற்றது. இருதரப்பாருக்கும் இடையில் சுமார் இரண்டு மணி நேரம் கடும் சண்டை நடைபெற்றது.

காலை 11.30 மணியளவில் வல்வெட்டித்துறையில் இருந்து வாகனங்கள் பின்தொடர சுமார் 50சிப்பாய்கள் தொண்டமனாறு நோக்கி நடைரோந்து சென்றனர்.

உடுப்பிட்டிச் சந்தி ஊடாக செல்ல முயன்ற சிப்பாய்கள்மீது புலிகள் திடீர்த் தாக்குதல் நடத்தினர்.

இரு பிரிவுகளாக (4ஆம் பக்கம் பார்க்க)

காங்கேசன்துறையில் ஆயுதங்கள் இறக்கப்பட்டன

இந்திய அதிகாரியும் அவதானித்தார்

யாழ்ப்பாணம், ஜூலை 3

காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து நேற்றுப் பெருந்தொகையான இராணுவத் தளபாடங்கள் மற்றும் ஆயுதங்கள் இறக்கப்பட்டன.

கொழும்பில் இருந்து வந்த கப்பல் ஒன்றில் இருந்தே இந்த தளபாடங்கள் இறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவத் தளபாடங்கள் இறக்கப்பட்டதை காங்கேசன்துறையில் வைத்து இந்தியத் தூதரக உயர் அதிகாரி ஒருவர்அவதானித்ததாகவும் தெரியவருகிறது.

காங்கேசன் துறைமுகத்துக்கு வெளியே தரித்துநிற்கும் 'பரூக்கா'கப்பலில் இருந்து இந்திய (4ஆம் பக்கம் பார்க்க)

வளலாயில் பெரும் மோதல்

யாழ்ப்பாணம், ஜூலை 3

வளலாய் மினி முகாமிலிருந்துநேற்றுஇரண்டு தடவைகள் வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதல் நிகழ்த்தி அவர்களை முகாமிற்குத் திருப்பியனுப்பினர்.

தாம் போர் நிறுத்தத்தை அறிவித்த பின்னர் படையினர் தரப்பில் மேற்கொள்ளப்பட்ட பெரும் இராணுவ நடவடிக்கை முஸ்தீபு இது எனப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

முதலில் நேற்று நண்பகல் ஒருமணியளவில் படையினர் வெளியேற முயற்சித்தனர்.

அந்த முயற்சி பலனளிக்காமல்போகவேமீண்டும் மாலை ஐந்துமணியளவில் பெரும் இராணுவத் தாக்குதலுடன் படையினர் முன்னேற முயற்சித்தனர்.

படையினருக்கு உதவியாக இரண்டு ஹெலிக்கொப்டர்கள் அப்பகுதி (4ஆம் பக்கம் பார்க்க)

ஹெலியில் பறந்து வந்தார்:

வவுனியா சியம்பலகஸ்வெவ தேரர் வடமராட்சிக்கு திடீர் விஜயம்

குடிமக்களைச் சந்தித்தார்

— வடமராட்சியிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

வடமராட்சி, ஜூலை 3

வவுனியா பௌத்த விகாரையின் பிரதமகுரு வண. சியம்பலகஸ்வெவ விமலசார நாயக்கா தேரர் புதன்கிழமை பிற்பகல் இரண்டு மணி அளவில் ஹெலிக்கொப்டர் மூலம் மந்திகை இராணுவ முகாமில் வந்திறங்கினார்.

அப்போது முகாமில் வடமராட்சி சிவில் பொறுப்பதிகாரியாக பணியாற்றும் பிரிகேடியர் ரூபசிங்கா இருந்தார்.

பூஸா தடுப்பு முகாமில் இருந்து கப்பலில் கொண்டுவரப்பட்ட சுமார் 500 தமிழ் இளைஞர்கள் வண. சியம்பலகஸ்வெவதேரர் முன்னிலையில் விடுவிக்கப்பட்டனர்.

ஊர் மக்கள்

தேரரின் வேண்டுகோளின் பேரில் அப்பகுதித் தமிழ்ப் பிரமுகர்கள் சிலரும் அங்கு வந்திருந்தனர்.

நடந்தவை பற்றி தேரர் ஊர்ப்பிரமுகர்களிடம் விசாரித்தார்.

வல்வெட்டித்துறையில் வீடுகள் எல்லாம் தரைமட்டமாக்கப்பட்ட செய்திகள் மற்றும் உயிரிழப்புக்கள் எல்லாம் விஸ்தாரமாக தேரருக்கு பிரமுகர்களால் விவரிக்கப்பட்டன

தேரருடன் ஊர்ப்பிரமுகர்கள் மனந் திறந்து பேசினர். அச்சமயம் பிரிகேடியர் அந்த இடத்தை விட்டுத் தனது அலுவலகத்துக்குச் சென்று விட்டார்.

பிரமுகர்கள் தாங்கள் வெளியிட்ட விஷயங் (4ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

குப்தாவும் பார்வையிடுவார்

யாழ்ப்பாணம், ஜூலை 3

இராணுவ நடவடிக்கைகளால் சேதமடைந்த வடமராட்சிப் பகுதியை கப்டன் குப்தாவும் பார்வையிடுவார்.

இதற்கான ஒழுங்குகள் செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பு சென்ற கப்டன் குப்தா புதனன்று விஷேட விமானத்தில் யாழ் வந்து சேர்ந்தார்.

இதே வேளை வடமராட்சிப் பகுதியில் இந்திய-இலங்கை செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் தங்கி நின்று அப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறியவுள்ளனர். (உ-10)

ஒட்டுசுட்டான் முகாம் படையினர் ரோந்து விஸ்தரிப்பு

குடிமக்கள் அச்சம்

முள்ளியவளை, ஜூலை3

ஒட்டுசுட்டான் முகாம் ஆயுதப்படையினரின் ரோந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயச்சந்தி புளியங்குளம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

சிப்பாய்கள் ஒட்டுசுட்டான் ஆஸ்பத்திரி, மகா வித்தியாலயம், அப்பமடுவிலுள்ள பற்றைகள் சிறிய ஒழுங்கைகள் ஆகியவற்றில் இரவு பகல் பதுங்கியிருப்பதால் அப்பகுதியில் சன நடமாட்டம் குறைந்து காணப்படுகிறது.

மாணவர்களை பாடசாலைக்கு அனுப்ப பெற்றோர் அஞ்சுகின்றனர்.

அப்பகுதியில் இருக்கும் ப. நோ. கூ. சங்க ஊழியர்களும் கடைச் சிப்பந்திகளும் ஆயுதப் படையினரின் விஸ்தரிக்கப்பட்ட நடமாட்டத்தால் திடீர் திடீரெனக் கடைகளைப் பூட்டி விட்டுச் சென்று விடுகின்றனர்.

நாளுக்கு நாள் ஆயுதப்படையினரின் நடமாட்டம் குடிமனைகள் உள்ள பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படுகின்றது. (இ-93)

பாலகிட்ணர் மேல்நீதிமன்ற நீதியரசரானார்

கொழும்பு, ஜூலை 3

மட்டக்களப்பு மேல் நீதியன்ற நீதிபதியாகக் கடமையாற்றிய திரு. கே. பாலகிட்ணர் மேன்முறையீட்டு(அப்பீல்)நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அண்மையில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் அவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் (உ)

படையினரும் கைது!

கொழும்பு, ஜூலை 3

கட்டுநாயக்கா விமானத்தளத் தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட 35 சந்தேக நபர்களில் ஐந்து பேர் ஸ்ரீலங்கா விமானப் படையினர்.

தாக்குதல் நடத்திய கோஷ்டியில் இந்த ஐவரும்தான் முக்கிய பங்கு வகித்தனர் என்று இரகசியப் பொலீஸார் தெரிவித்தனர்.

20 வயதான இரண்டு இளம்பெண்களும் இச்சந்தேக நபர்களில் அடங்குகின்றனர்.

✱ செய்திக்கொத்து ✱

முதலிடம்

மானிப்பாய், ஜூலை 3

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் அரவிந்தன் அப்புத்துரை நல்லூர் வட்டார பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் மத்திய பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றார். (இ-96)

வீர அஞ்சலி

சாவகச்சேரி, ஜூலை 3

கடந்த 25 ஆம் திகதி வளவாயில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணமடைந்தவரான மட்டுவில் வடக்கைச் சேர்ந்த இரண்டாவது லெப்ரினன்ட் பொன்னுத்துரை குருக்கள் ஏகாம்பரம் (விஜி) அவர்களுக்கு வீர அஞ்சலி செலுத்தப்பட்டது. (இ-31)

சிப்பாய்கள் செயல்

வல்வெட்டித்துறை, ஜூலை 3

முள்ளியில் சோதனைகளில் ஈடுபடும் சிப்பாய்கள் பொதுமக்களிடம் இருந்து மாம்பழம், பலாப்பழம் ஆகியவற்றைக் கேட்டுக் கேள்வி இல்லாமல் எடுத்துக் கொள்கிறார்களாம். (இ-16)

அன்பளிப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 3

மானிப்பாய் வில்லியம் மேதர் தேவாலயத்தினர் சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்புக்கு அரிசி, மைசூர்ப் பருப்பு முதலான உணவுப் பண்டங்களை அன்பளிப்பாக வழங்கினர்: (இ-161)

அகதிகளுக்கு வேலைவாய்ப்பு

வட்டுக்கோட்டை, ஜூலை 3

சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பினால் நடத்தப்படும் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (இ161)

வெற்றுச்சாக்கு பீப்பாய்களைத் திருப்பித் தருக

யாழ்ப்பாணம், ஜூலை 3

இந்திய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்காக உணவுப் பொருள்களை கொள்வனவு செய்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்த வேலை முடிந்ததும் உணவுப் பொருள்கள் வந்த வெற்றுச் சாக்குகள் பீப்பாய்களை மீண்டும் ஒப்படைக்கும்படி யாழ்செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் மூலமாக இவற்றை யாழ் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கும்படி யாழ் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. எஸ். பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். (உ-ள)

மக்கள் முகம்

வட்டுக்கோட்டை சனசமூக நிலைய சமாஜம்

வட்டுக்கோட்டை, ஜூலை 3

வட்டுக்கோட்டை சனசமூக நிலைய சமாஜ வருடாந்தப் பொதுக் கூட்டம் சமாஜத் தலைவர் திரு. வி. என். இராசரத்தினம் தலைமையில் வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெற்றது.

பின் வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்:-

தலைவர்: திரு. வி. என். இராசரத்தினம், உபதலைவர்: திரு. தி. தியாகராஜா, செயலாளர்: திரு. கி. தாமோதரம்பிள்ளை, உப செயலாளர்: திரு. எஸ். லிங்கேஸ்வரன், பொருளாளர்: திரு. அ. முருகவேள், உறுப்பினர்கள்: திரு. வி. வள்ளிகாந்தன், திரு. மா. ரவீந்திரன். (இ-161)

அதிரடிப் படையினர் மினி முகாம் அமைப்பு

மாறு வேடத்தில் நகரில் உலா

மட்டக்களப்பு, ஜூலை 3

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்தில் விசேஷ அதிரடிப் படையினர் மினி முகாம் ஒன்றை அமைத்துள்ளனர்.

பொலீஸ் மாடி விடுதியிலுள்ள 4ம் மாடியில் இம் முகாம் அமைந்துள்ளது.

சுமார் 25 பேர் இம் முகாமில் கடமையாற்றுகிறார்கள்.

போராளிகளை மடக்கிப் பிடிப்பதற்காக நகரிலும் நகர சுற்றுடலிலும் இவர்கள் பல்வேறு மாறு வேடங்களில் நடமாடுகிறார்கள்.

கிராம வாசி, முஸ்லிம் வியாபாரி, நாகரிகமான வாலிபர் உட்பட பல தோற்றங்களில் இவர்களைக் காணக்கூடியதாக இருக்கிறதாம். (இ-21)

செஞ்சிலுவைச் சங்க உபஅலுவலகம் திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 3

செஞ்சிலுவைச் சங்கத்தின் புதிய உப அலுவலகம் ஒன்று புதனன்று ஞானம்ஸ் ஹோட்டலில் திறந்துவைக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஆர். டபிள்யு. சோமசிறி இந்த உப அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளவிரும்புபவர்கள் இங்கு வருமாறு வேண்டப்படுகின்றனர் (உ-10)

நாளை சனிக்கிழமை முதல்

6 முகாம்களைச் சேர்ந்த

2,101 அகதிகளுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ஆறு முகாம்களைச் சேர்ந்த 394 குடும்பங்களிலுள்ள 2,101 அகதிகளுக்கு எதிர்வரும் சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்க்கிழமைகளில் இந்திய நிவாரண உதவிகள் வழங்கப்படும்.

யாழ் உ. அ. அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற உதவி அரசாங்க அதிபர், இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, கிராம சேவையாளர், பிரசைகள்குழு பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள இந்த அகதி முகாம்களில் உள்ள 647 குடும்பங்களுக்கு கடந்த நாட்களில் இந்திய நிவாரணப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவை தவிர்ந்த ஏனைய ஆறு முகாம்களுக்கும் எதிர்வரும் நாட்களில் நிவாரணப் பொருள்கள் வழங்கப்படும்,

சனிக்கிழமை: புங்கங்குளம் இல. 98 இல் உள்ள முகாம், துரையப்பா மகாவித்தியாலய முகாம்.

ஞாயிற்றுக்கிழமை: சென் பற்றிக்ஸ் முகாம்.

திங்கட்கிழமை: சென் பற்றிக்ஸ் முகாம்.

செவ்வாய்: ரயில் நிலையம் முகாம், சந்தன மாதா கோவில் முகாம். நாவாந்துறை சென் மேரி ஆலய முகாம்.

இந்த முகாம்களுக்கான உணவு விநியோக வேலைகள் உ.அ. அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் தலைமையிலான ஐவர் அடங்கிய குழு மேற்கொண்டுள்ளது.

உணவு விநியோகத்தின் போது இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேரில் சமுகமளிப்பார்கள். (இ-ள)

கொள்ளை லாபம்

சங்கானை, ஜூலை 3

சங்கானைப் பகுதிக் கடை ஒன்றில் ஒரு றாத்தல் பாண் ரூ. 3/50க்கு விற்பனை செய்யப்பட்டது

அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்கள் இங்கு தஞ்சமடைந்திருப்பதால் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் ஈட்டும் வர்த்தகர்களை தட்டிக் கேட்பாரில்லையா? என பொது மக்கள் கேட்கிறார்கள். (இ. ரி.)

தினம் ஒரு மாணவன் இராணுவத்துக்குப் பலியாகிறான்

வடமராட்சி மாணவர் பிரதிநிதி உரை

யாழ்ப்பாணம், ஜூலை3

தினம் ஒரு தமிழ் மாணவன் இராணுவத்தால் கொலை செய்யப்படுகிறான்.

புதனன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மாணவர் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தின் இறுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய வடமராட்சி மாணவப் பிரதிநிதி செல்வன் குலராஜா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எனது கண்முன்னாலேயே எத்தனையோ மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். பலர் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

1983, 85 இல் ஹாட்டிக்கல்லூரியில் நடைபெற்ற இராணுவத்தினரின் நூல்நிலைய எரிப்பு, மாணவர் தாக்குதல் சம்பவங்களை எதிர்த்து வடமராட்சியில், வடமராட்சி மாணவர் நடத்திய போராட்டங்களுக்கு யாழ் மாணவர் ஒத்துழைப்பு வழங்கவில்லை.

அன்று நாம் ஓர்பூரணமான ஒன்று சேர்ந்த போராட்டம் நடத்தியிருந்தால், இன்று வடமராட்சியில் பயங்கரவாதிகளின் முகாம்கள் என்று கூறி பாடசாலைகளை அழிப்பதற்கு அரசு துணிந்திருக்காது- என்றார்.

யாழ்ப்பாண மாணவர் பிரதிநிதி செல்வன் சிவநேசன் உரையாற்றுகையில் ''இதுவரை தமிழ் மாணவர் போராட்டம் எதுவும் உலகளவில் எடுத்துக் காட்டப்படவில்லை.

தமிழ் மாணவர்கள் ஒன்று திரண்டு தமது [illegible] என்றார்.

வட்டுக்கோட்டை மாணவர் பிரதிநிதி உரையாற்றுகையில் ''நாம் நிறைவேற்றக் கூடிய நியாயமான கோரிக்கைகளையே முன்வைத்துள்ளோம்.

நாம் கோட்டை, பலாலி முகாம்களை எடுக்கும்படி கேட்கவில்லை, பாடசாலைகளில் உள்ள முகாம்களையே எடுக்கும்படி கேட்டுள்ளோம்'' என்றார்.

சாவகச்சேரி மாணவர் பிரதிநிதி நித்திய சங்கர், யாழ்ப்பாண மாணவிகள் பிரதிநிதி சுபத்திரா, மானிப்பாய் மாணவர் பிரதிநிதி ஜெகசோதி, தெல்லிப்பளை மாணவர் பிரதிநிதி செந்தில்குமரன், கொக்குவில் மாணவர் பிரதிநிதி சத்தியசோதி, ஆசிரியர் பிரதிநிதி திரு. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினர். (இ-ள)

உண்ணாவிரதம்

சாவகச்சேரியில்

சாவகச்சேரி, ஜூலை 3

தமிழீழப் போராட்டத்தையும். விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்கக் கோரி சாவகச்சேரித் தொகுதியில் சகல கிராமங்களிலும் பரவலாக உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெற்றன.

பெரிய அளவிலான உண்ணாவிரதம் சந்தை மைதானத்தில் நடைபெற்றது. (இ-31)

நுணாவிலில்

சாவகச்சேரி, ஜூலை 3

மட்டுவில் நுணாவிலில் அமைந்துள்ள திருமலை அகதிகள் கேடில்ஸ் குடியேற்றத் திட்டத்தினர் மருதடி விளைவேலி வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர். (இ-31)

கோவளத்தில்

காரைநகர், ஜூலை 3

கோவளம் கிராம முன்னேற்றச் சங்கத்தில் உண்ணாவிரதப் போராட்டம் இடம் பெற்றது. இதில் முழுக்கமுழுக்கப் பெண்களே ஈடுபட்டிருந்தனர். (இ-73)

கைதடியில்

கைதடி, ஜூலை 3

கைதடி இணுங்கித் தோட்ட கந்தசுவாமி கோவிலின் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. (இ-74)

வங்களாவடியில்

வேலணை, ஜூலை 3

வேலணை வங்களாவடி முருகன் கோவில் முன்றலில் பிரமாண்டமான உண்ணாவிரதம் நடைபெற்றது. (இ-167)

கொடிகாமத்தில்

கொடிகாமம், ஜூலை3

கொடிகாமம் வர்த்தகர் சங்கமும் மக்கள் ஒன்றியமும் இணைந்து கொடிகாமம் சந்தை மைதானத்தில் ஒருநாள் உண்ணாவிரதம் இருந்தனர். (இ-75)

மட்டுவிலில்

சாவகச்சேரி, ஜூலை 3

தமிழீழப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் மட்டுவில் வேரற்கேணி கந்தசுவாமி கோவிலில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா, வளர்மதி, மட்டுவில் நுணாவில், கைதடி நுணாவில் ஒன்றியங்களால் இந்த உண்ணாவிரதம் ஒழுங்கு செய்யப்பட்டன. (இ-31)

இளைஞர்களின் முயற்சி வெற்றிபெறுவதற்கு

அயராத உழைப்பு அவசியம்

இளவாலை, ஜூலை 3

ஆரம்பத்தில் ஊக்கத்துடன் தொடக்கப்படும் இளைஞர்களின் முயற்சிகள் வெற்றிகரமாகத் தொடர வேண்டுமானால் இடைவிடாத முயற்சியும் உழைப்பும் அவசியம்.

இளவாலை புனித அன்னம்மாள் ஆலய புனித சின்னப்பர் இளைஞர் மன்றத்தின் முதல் வருட நிறைவு விழா சமீபத்தில் நடைபெற்றது.

அதில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட இளவாலை புனித என்றியரசர் கல்லூரி அதிபர் அருள்திரு. அன்ரன் இராசநாயகம் அடிகள் மேற்கண்டவாறு கூறினார்.

யுவதிகள் மன்றத் தலைவி செல்வி நிர்மலா யோசப் பேசுகையில் குறைகளைக் கேட்டு இளைஞர்கள் சோர்ந்துபோகக் கூடாது என்றார்.

மன்றக்காப்பாளர் அருள்திரு. பற்றிக் அடிகள் தமது உரையில் இளைஞர்கள் ஒருவருடத்துள்ளே நன்மைபயக்கத்தக்க பல சமூக சேவைகளை ஆற்றியிருப்பது பாராட்டுக்குரியது என்றார்.

மரியாயின்சேனை உறுப்பினர் திரு. சு. சந்தியாப்பிள்ளை பேசுகையில் இளைஞர்கள் எப்போதும் உயர்வுள்ளமுடையவர்களாக வளர்ந்து வர வேண்டும் என்றார். (இ-48)

✱✱✱✱✱✱✱✱✱✱

வியாபாரம் பெருக

விளம்பரம்செய்க

✱✱✱✱✱✱✱✱✱✱

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஈராண்டுப் பகுதி நேரக் கல்விப் பட்டப்பின் டிப்புளோமா கற்கைநெறி 1987/88

புதியஅனுமதி

பட்டம் பெற்ற பின் மூன்றுகால ஆசிரியர் சேவை அனுபவமுடைய ஆசிரியர்களிடமிருந்து மேற்படி கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தேர்வு நாடிகள் 31 - 07 - 1987 இல் 50 வயதுக்குக் குறைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்

இக்கற்கை நெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புவோர் நிதிக் கிளையில் ரூபா 10/- செலுத்திய பற்றுச்சீட்டினைக் கல்விக்கிளை, சிரேட்ட உதவிப் பதிவாளரிடம் சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வொன்றிற்கும் அதன் பெறுபேற்றின் அடிப்படையில் நடாத்தப்படும் நேர்முகத் தேர்வொன்றிற்கும் தேர்வுநாடிகள் தோற்ற வேண்டும்.

தெரிவு செய்யப்படுவோர் 25 மைல் சுற்றுடலில் அமைந்துள்ள பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதோடு இக்கற்கை நெறிக்குப் பதிவுசெய்யும் பொழுது இவ்விடமாற்றக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சிரேட்ட உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கு 31-07-87 ஆந் திகதிக்கு முன் அனுப்புதல்வேண்டும்.

—பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

HORIZON ENTERPRISES

பிரயாண ஒழுங்குகள்

✱ டுபாய் ✱ குவைத் ✱ சவூதிஅரம்கோ கொம்பனி

டிரைவர் விமானநிலையக்கிளீனர் ஹொஸ்பிடல்கிளீனர்
சமையற்காரர் H. V. டிரைவர் தச்சுவேலை
பணிப்பெண்கள் மேசன்

சிங்கப்பூர் பணிப் பெண்கள்

குறைந்த கட்டணத்தில் வயதெல்லை 17 - 35

மற்றும் அனைத்து மத்தியகிழக்கு நாடுகளுக்கான வெற்றிடங்கள் மிக அதிகளவில் எம்மிடம் இருப்பதால் தாமதமின்றி தொடர்பு கொள்ளவும். தற்போதைய நாட்டு நிலைமை காரணமாக எம்முடன் தொடர்பு கொண்டு நாம் முதல் தடவையில் அவர்களை கொழும்பு அழைத்துச் சென்று மீண்டும் யாழ் திரும்பாது எமது பாதுகாப்புடன் சகல வசதிகளும் நிறைந்த எங்கள் சொந்த வதிவிடத்தில் வைத்து மிகத் துரிதகதியில் பயணம் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதையும் உண்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம் எந்தக் காரணம் கொண்டும் முற்பணம் எதுவும் அறவிடப்படமாட்டாது. எமது முகவர் நிலையத்தினால் பயணம் மேற்கொள்வோர் பெயர் விபரம் அடுத்த வாரம் வெளியிடப் படும். மற்றும் எம்மிடம் எல்லா நாட்டிற்கான சகலவிதமான முத்திரைகளும் மலிவு விலையில் கிடைக்கும். உங்கள் கடவுச்சீட்டுக்கள் [PASS PORT] குறித்த தவணையில் குறைந்த செலவில் செய்து தரப்படும்.

✱ மாலைதீவு செல்ல விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்: வயதெல்லை 17 — 35. மிகக்குறைந்த கட்டணத்தில் துரிதகதியில் செய்து தரப்படும்.

A. பத்மதாஸ்
இல, 97/1, பருத்தித்துறை வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

HORIZON ENTERPRISES
No. 87, 2/1, 2nd Floor,
Kollupitiya Lane,
COLOMBO - 3.
Telephone: 574000

Medical Laboratory TECHNOLOGIST

Vacancy exists for a full time Medical Laboratory Technologist. Salary not less than Rs. 1000/- per month negotiable Bio Data to:

DIRECTOR,
Maternity & Nursing Home
Market Place, Chankanai.

உதய சங்கற்பம்

நாம் வாழ்வில் முன்னேறிச் செல்லும் போதுதான் நமக்கு எவ்வளவு திறமைகள் உள்ளன என்பதன் அளவு தெரிய வருகின்றது.

— ஃபிரெட்.

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை
இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
03.7.1987 த.பெ.இல: - 23

செஞ்சிலுவை முயற்சி வெற்றி அடையட்டும்

ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் நல்ல காரியம் ஒன்றைச் செய்ய முன்வந்திருப்பதாகச் செய்தி வெளியாகி உள்ளது.

வன்செயல்கள், தாக்குதல்களின் போது 'காணுமற் போனவர்கள்' நிலை குறித்து சம்பந்தப்பட்ட இராணுவ, மற்றும் சிவில் அதிகாரிகளிடம் விவரம் அறிய அது முயற்சி மேற்கொள்ளப் போவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவ நடவடிக்கைகளின் போது, பலர் கைது செய்யப்பட்டும் காணுமலும் போயிருக்கிறுர்கள். பலர் கைது செய்யப்படாமலே சென்ற இடங்களில் இருந்து திரும்பாமல் காணுமற் போயிருக்கிறுர்கள். அவர்கள் குறித்து உறவினர்களும், பிரசைகள் குழுக்களும் இராணுவ உயர் அதிகாரிகளிடம் விசாரித்தும் பலன் எதுவும் கிடைக்கவில்லை. இது கடந்த நான்கு ஆண்டுகளாகத் தொடர்ந்து நீளும் கதை!

என்ன நடந்தது என்பதே தெரியாமல் 'காணுமற்போன' தமிழர்களின் எண்ணிக்கை ஐநூற்றுக்கும் அதிகமாகிவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆகப் பிந்திய அறிக்கை தெரிவித்தது.

ஆனுல் ஸ்ரீலங்கா அரசாங்கம் அது குறித்து அக்கறை காட்டியதாக இல்லை. மாறுக அப்படி எதுவுமே நடக்கவில்லை என்று மறுத்து மன்னிப்புச் சபையுடன் வம்புச் சண்டைக்குப் போனது; போகிறது!

காணுமற் போனவர்கள் பலரும் குடும்பங்களின் தலைவர்களும், இளைஞர்களுமாவர். அதனுல் பல தமிழ்க் குடும்பங்கள் நிரந்தரமாக நிர்க்கதிக்கு ஆளாகியுள்ளன. ஆனுல் ஜனநாயகம் பற்றிப் பெரிதாகப் பேசும் அரசாங்கம் பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நிலையைச் சிறிதும் உணராமல், தனது படைகளின் அராஜகத்தை மூடி மறைக்கப் பார்க்கிறது.

ஜனநாயக நாடு ஒன்றில், ஒரு மனித உயிர், இயற்கை மரணம் அன்றி, வேறு எந்த விதத்தில் பிரிந்திருந்தாலும், அதனைக் கண்டுபிடித்து, சம்பந்தப்பட்ட சந்தேக நபரைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவருக்கு தண்டனை வழங்குவதே மரபு.

ஆனுல் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் என்ற ஓர் அநாகரிகச் சட்டத்தின் போர்வைக்குள், ஆயிரமாயிரம் தமிழர்கள் கொன்றொழிக்கப்பட்டு, குற்றவாளிகள் மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் இல்லாமல் அநியாயம் நடந்திருக்கிறது; நடக்கிறது.

ஜனநாயக நாடுகளில் ஆயுதப்படையினர் சட்டத்துக்கு மேற்பட்டவர்கள் அல்லர். அவர்கள் பதவி சான்று புரியும் குற்றச் செயல்கள் இராணுவ நீதிமன்றங்களிலாவது விசாரிக்கப்பட்டுத் தண்டனை வழங்கப்படுகிறது.

ஆனுல் இங்கு அப்படியல்ல. படையினர் மக்களுக்கு மேற்பட்டவர்களாக் கப்பட்டு, அவர்கள் எதையும், எப்படியும் செய்யலாம் என்ற நிலை உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டும் உள்ளது. குறிப்பாகத் தமிழர்களைப் படைகள் என்ன செய்தாலும் அது விசாரணை விளக்கம், வழக்கு இன்றியே நியாயப்படுத்தப்படுகிறது.

ஆயுதப் படைகளின் குற்றச் செயல்களை, அக்கிரமங்களை அரசாங்கமும் சேர்ந்து மறைக்கும் போது மக்களுக்கு எப்படி ஐயா, நிவாரணம் கிடைக்கும்? நீதி தான் எவ்வாறு கிடைக்கும்?

இவ் விடயத்தில் செஞ்சிலுவைச் சங்கம், காணுமற் போனவர்களின் உறவினர்களுக்கு உதவ முன்வந்திருப்பது பெரும் காரியமாகும்.

செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேசப் புகழ் பெற்றது. அல்லல், இன்னல் உறுவோருக்கு, இன, மத, நாடு, பிரதேச வேறுபாடின்றி மனிதாபிமான இலட்சியத்துடன் உதவி புரிவது அது. உலக மக்களின் உயிர் காக்க உழைக்கும் உன்னத தொண்டர் நிறுவனம் அது.

காணுமற்போன இலங்கைத் தமிழர்களின் நிலையைக் கண்டறியும் அதன் முயற்சி சோதனைக்குரியதாக மாறலாம். சர்வதேச மன்னிப்புச் சபையுடன் மோதுவது போல செஞ்சிலுவைச் சங்கத்துடன் மோதுவதற்கும் கொழும்பு அரசும் அதன் மந்திரிப் பிரதானிகளும் முன்வரலாம்.

ஆகையால் செஞ்சிலுவைச் சங்கம் தனது சர்வதேசச் செல்வாக்கைப் பயன்படுத்தியாவது, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதில் வெற்றி காணவேண்டும் என நாம் விழைகின்ருேம். இங்கு வந்துள்ள கொழும்பு செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் அங்கு சென்றதும் மனம் சலித்து அரசிடம் தோற்றுவிடக் கூடாது என்பதும் எமது எதிர்பார்ப்பாகும்.

வடக்கில் மட்டுமன்றி, காணுமற்போன தமிழர் எண்ணிக்கை கிழக்கில் தான் மிக அதிகம். எனவே அப்பகுதியில் காணுமற் போனவர்கள் பற்றிய நிலைமையையும் கொழும்பு செஞ்சிலுவைச் சங்கம் கண்டறிந்து, பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகுக.

ராஜீவ்காந்தி மூன்று நாள் ரஷ்ய விஜயம்

இன்று கிரெம்ளினில் விருந்து

மாஸ்கோ, ஜூலை 2

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு சோவியத் தலைவர் மிக்செய்ல் கோர்பச்சேவ் வெள்ளி இரவு விருந்துபசாரம் ஒன்றை அளித்து கௌரவிக்க இருக்கின்றுர்.

மூன்று நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி தனது மனைவி சோனியா காந்தியுடன் வியாழன் காலை பயணமானுர்.

பிரதமருடன் உயர் மட்ட அமைச்சர் குழு ஒன்றும் சென்று உள்ளது.

அமைச்சர்கள் நரசிம்மராவ், என்.டி. திவாரி, இணை அமைச்சர் மார்கரட் ஆல்வா, வெளியுறவுச் செயலாளர் கே. பி. எஸ். மேனன் ஆகியோர் இக்குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

புதுடில்லியில் இருந்து புறப்படும் முன்னர் பிரதமர் காந்தி சோவியத் டெலிவிஷனுக்கும் டாஸ் செய்தி ஸ்தாபனத்துக்கும் சிறப்புப் பேட்டிகளை அளித்திருந்தார்.

''இந்திய-ரஷ்ய உறவுகள் வலுப்படுத்தப்படுகின்றன. உலக சமாதானத்துக்கு இருநாடுகளும் நெருங்கி உழைக்க வேண்டும்'' இப்படி அப்பேட்டிகளில் திரு. காந்தி தெரிவித்து இருந்தார். (இ-எ)

டெலிவிஷன் துறையில் மற்றொரு சாதனை

லண்டன், ஜூலை2

இந்த ஆண்டு முடிவில் முப்பரிமாண(3 டி)டெலிவிஷன் பெட்டிகள் சந்தைக்கு வரவுள்ளன.

வர்த்தக ரீதியில் முப்பரிமாண டெலிவிஷன் பெட்டிகளைக் கண்டுபிடித்த பெருமையை பிரிட்டிஷ் எலக்ரோனிக் என்ஜினியர்கள் பெற்றுள்ளனர்.

இரண்டு லென்சுகள் பொருத்தப்பட்டவிசேஷ விடியோ கமெரா முப்பரிமாண (3-டி) படங்களை ஒரு லென்ஸில் இருந்து மற்ற லென்ஸுக்கு மாற்றி மாற்றி பதிவு செய்கின்றது. (இ-எ)

ஆறு அடி அமிழ்ந்த கிராமம்

மணிலா, ஜூலை 2

பூமியதிர்ச்சி, மண் சரிவைத் தொடர்ந்து பிலிப்பீன்ஸின் வட பகுதியில் உள்ள கிராமம் ஒன்று ஆறு அடி நிலத்தில் அமிழ்ந்தது.

நிலத்துக்கு அடியில் ஏற்பட்ட வெடிச்சத்தத்தை தொடர்ந்து, அக்கிராமத்தில் பூமியதிர்ச்சியும் மண் சரிவும் ஏற்பட்டன.

கலிங்க மாகாணத்தில் உள்ள குமாக்மலைப் பிரதேசத்தின் அடிவாரத்தில் தான் இந்த வெடிச்சத்தம் ஏற்பட்டது.

இகொரட் கிராமமே இப்படி நிலத்தில் அமிழ்ந்தது.

எரிமலை ஒன்று தோன்றுவதற்கான அடையாளமாக இது இருக்கலாம் என்று கிராம வாசிகள் அதிகாரிகளிடம் அச்சம் தெரிவித்து உள்ளனர். (இ-எ)

19 பேர் பலி!

லக்னே, ஜூலை 2

உத்தர பிரதேச மாநிலத்தில் நடந்த படகு விபத்து ஒன்றில் 19 பேர் உயிரிழந்தனர் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டு உள்ளது. (இ-எ)

தீ விபத்து

சென்னை, ஜூலை2

சென்னை மாநகரில் வியாசர் பாடியில் ஏற்பட்ட தீவிபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர்.

பிஜியில்

முன்னுள் மந்திரிகள் மூவர் கைதாகி விடுதலை

சுவா, ஜூலை 2

பதவி கவிழ்க்கப்பட்ட டாக்டர் பவித்ரா அமைச்சரவையைச் சேர்ந்த மூன்று அமைச்சர்கள் நேற்று பிஜி இராணுவத்தினுல் கைது செய்யப்பட்டார்கள்.

சுவா பொலீஸ் நிலையம் கொண்டு செல்லப்பட்ட அவர்கள் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்,

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான முன்னுள் அமைச்சர் நாகராஜ் சொன்னதாவது;

இந்து ஆலயம் ஒன்றில் பிரார்த்தனைக் கூட்டம் ஒன்றில் நாம் கலந்து கொண்டோம். அப்போது பதினைந்து சிப்பாய்கள் திடீரென்று அங்கே வந்து எம்மைக் கைது செய்தனர்.

இப்படி அமைச்சர் சொன்னுர்.

அவசரகாலச் சட்ட விதிகளை மீறி வர்த்தக நிலையங்களைப் பூட்டி வைத்ததற்காக சுமார் 50 இந்திய வர்த்தகர்கள் இரணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர்.

இதனிடையில் இந்தியர்களுக்கும் பிஜி இனத்தவர்களுக்கும் இடையே மோதல் ஏற்படக்கூடிய பதற்றநிலை நிலவுவதாக செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

தென் கொரிய ஜனுதிபதி

டெலிவிஷனில்தோன்றி சீர்திருத்தம் பற்றி அறிவிப்பு

சோல், ஜூலை 2

மக்கள் எழுச்சிக்கு பணிந்து போனபின்னர் முதல் தடவையாகதென் கொரிய ஜனுதிபதி சுன்-டூ-வாங் செவ்வாய்க்கிழமை டெலிவிஷனில் தோன்றி பேசினுர்.

1988 ஜனுதிபதி தேர்தல், புதிய அரசமைப்புச் சட்டத்தின் படி நடத்தப்படும் என்றும் அறிவித்தார் ஜனுதிபதி.

★பத்திரிகைச் சுதந்திரம் பூரணமாக வழங்கப்படும்.

★எதிர்க்கட்சித் தலைவர் கிம்-டே-யங் உட்பட பலருக்கு மன்னிப்பு வழங்கப்படும்.

★அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்படுவர்.

★மனித உரிமைகள் பேணப்படும்.

★நேரடியான வாக்களிப்பினுல் ஜனுதிபதி தெரிவு செய்யப்படுவார்.

மேற்கண்ட அம்சங்கள் புதிய அரசமைப்பில் இடம் பெறும் என்றும் ஜனுதிபதி சுன்-டு-வாங் அறிவித்தார்.

25.4.88 இல் புதிய ஜனுதிபதி பதவி ஏற்பார் என்றும் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

★ பூஸா முகாம் சித்திரவதைகள்:

நிர்வாணமாக்கிய பின் தலைகீழாக கட்டித் தொங்கவிட்டனர்

பூஸா இராணுவ முகாமில் இடம் பெறும் சித்திரவதை, துன்புறுத்தல்கள் மற்றும் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை வெளியிட்ட ஆறுபக்க அறிக்கையின் நான்காவது பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

2. பூஸா முகாமில் துன்புறுத்தல்கள்= சித்திரவதைகள்:

வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள இராணுவ, அதிரடிப்படை முகாம்களில் தடுத்து வைக்கப்படும் சமயத்திலே பெரும்பாலான தமிழ்க் கைதிகள் சித்திரவதை மற்றும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

அவர்கள் பூஸா முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டவுடன் மேலும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகின்றனர்.

முகாமை அடைந்தவுடன் தாக்குதல்களுக்கு அவர்கள் ஆளாகின்றனர்.

ஒரு தடுப்புக்காவல் கைதி கூறுகின்றுர்:

'பூஸா தடுப்பு முகாமில் பல்வேறு விதமான சித்திரவதைகளுக்கு கைதிகள் ஆளாகின்றனர். சிப்பாய்களும் இராணுவ புலனுய்வு அதிகாரிகளுமே தாக்குதல்களை நடத்துகின்றனர்.

பெரிய அதிகாரியில் இருந்து சிப்பாய்வரை, இராணுவத்தைச் சேர்ந்த எவரும் தான் நினைத்தவுடன் கைதியை அழைத்துச் சென்று சித்திரவதை செய்யலாம்.

கழிவுக்கிடங்கில்...

இன்னெருவர் கூறுகின்றுர்:

புதிய கைதிகள் கொண்டுவரப்பட்ட உடன் நீண்ட கம்புகளினுல் தாக்கப்படுகின்றனர். தலையில் இரத்தக் காயங்கள் ஏற்படுகின்றன. கை, கால்களில் முறிவுகள் இதனுல் ஏற்படுகின்றன.

அக்கைதி மேலும் கூறுகின்றுர்:

'ஒருமுறை இயற்கைக் கடன்கழிக்க இரண்டு கைதிகள் வெளியே வந்தனர். முதலில் தாக்குதலுக்கு ஆளான அவர்கள் அன்று இரவு பத்து மணி வரை மலகூடச் சழிவுக் கிடங்கினுள் நிற்க வைக்கப்பட்டனர்.

பெரும்பாலான சித்திரவதைகள் விசாரணைக் குட்படுத்தும் போது தான் முகாமில் இடம் பெறுகின்றன.

1986 பிற்பகுதியில் பூஸாவில் இருந்து விடுவிக்கப்பட்ட இன்னெரு தமிழ்க் கைதி கூறுகின்றுர்.

விசாரணையின் போது கைதிகள் தாக்கப்படுவது தினமும் நடைபெறும் சம்பவமாகி விட்டது.

சிலர் நிலத்தில் குப்புறப் படுக்க வைக்கப்படுகின்றனர். பின்னர் நிலத்துடன் அமுக்கப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து குதிக்கால்களில் பலமாக அடிக்க வைக்கப்படுகின்றனர்.

1985 ஜூனில் ஒரு நாள்... மூன்று பெண் கைதிகளுடன் நானும் விசாரணைக்காக எடுத்துச் செல்லப்பட்டேன்.

மண்போட்டு நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் குழாயினுல் 50 முறைகளுக்கு மேலாகத் தலையிலும் கைகளிலும் தாக்கப்பட்டேன். ஏனையோரும் இப்படித் தாக்கப்பட்டனர். இதனுல் நான் பல தினங்கள் ஆட, அசைய முடியாத வேதனைக்குள்ளானேன்.

நிர்வாணமாக்கிய பின்னர் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்ட பின்னர் மண், சிமெந்தினுல் நிரப்பப்பட்ட பிளாஸ்டிக் குழாய்களினுல் புலனுய்வு அதிகாரிகள் தாக்கினர். பெண் கைதிகளுக்கும் இதே நிலைதான்.

இரத்தக் காயங்களுடன் அறிவு மயங்கிய நிலையில் கூட கைதிகளை நீண்ட மூங்கில், மற்றும் அறுக்கப்பட்ட மரங்களினுல் தாக்கிச் சித்திரவதை செய்வது தொடர்ந்து இடம்பெறும்.

ஆண் கைதிகளை பின்னர் எழும்பி நிற்கச் சொல்வார்கள் பின்னர் மர்ம உறுப்புக்களை மேசை மீது வைத்தபடி நிற்கும்படி உத்தரவிடுவர். பின்னர் குழாய்கள் பலகைகளினுல் உறுப்புக்கள் மீது சிப்பாய்கள் அடிப்பர்.

மரத்தினுல் செய்யப்பட்ட வாங்கு மீது குப்புறப்படுக்க வைத்துவிட்டு உருளையான தடிகளை மலத்துவாரத்தினுள் திணிப்பர்.

குதிக்கால்கள், முதுசெலும்பு ஆகியவற்றைப் பார்த்து இரும்புச் சம்பியால் தாக்குவர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த சிலரும் திருகோணமலையைச் சேர்ந்த 55 வயதான ஒருவரும் இப்படியான சித்திரவதைக்குள்ளானுர்கள். (இவர்களின் பெயர்கள் மன்னிப்புச் சபையிடம் உண்டு)

முழங்காலில், கைகளை உயர்த்திய வண்ணம் நீண்ட நேரம் நிற்பது. நீண்ட நேரம் குத்துக்கரணம் போடுவது, தலைகீழாகத் தொங்கவிடப்படுவது, மலசலகூடக் கிடங்கில் உள்ள அசுத்த நீரினுள் தலை மட்டும் வெளியே தெரியக் கூடியதாக நிற்க வைப்பது—இவை எல்லாம் பூஸா முகாமில் இடம்பெறும் சித்திரவதைகள்—

இப்படி அவர் சொன்னுர். (இ-எ)

(வளரும்)

ஆகாய ரீதியான நடவடிக்கைக்கு ஒரு வரையறை உண்டு

கடல் மார்க்கம் அப்படி அல்ல

நவீன கால யுத்தம், ராஜதந்திரம் ஆகியவற்றில் விமானப் படையின் வல்லமை எவ்வளவு முக்கியமானது என்பதை இந்த நடவடிக்கை தெளிவாகக் காட்டியது — லிபியா மீதான அதிபர் ரெனுல்ட் றேகனின் விமானத் தாக்குதல் ஒரு வகை.

யாழ். மீதான இந்தியாவின் மனிதாபிமான விமான நடவடிக்கை இன்னெரு வகை.

தேசிய எல்லைகளைத் தாண்டி யுத்தம் இன்றி வல்லமை காட்டப்பட்டது. இது பீரங்கிப் படகு ராஜதந்திரத்துக்குப் பதிலாக அமைந்தது.

இந்த நடவடிக்கை எல்லாமாக ஐந்து நிமிடங்களில் முடிவடைந்துவிட்டது பெரிய நன்மையாக இருந்தது.

'யுத்தம் இல்லாமல் வலிமை காட்டல்''— என்ற தலைப்பில் 'புரொண்ட்லைன்' (ஜூன் 13-26) இதழில் வெளியான கட்டுரையின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

கட்டுரையை எழுதியவர் 'இந்து'வின் விசேட செய்தியாளர் மனேஜ் ஜோஷி

ஸ்ரீ லங்காவினுல் செய்யக்கூடியது சிறியதாகவே இருந்தது. பெரிய பிரச்சினையாக்கக் கூடியதாக ஒன்றுமே இல்லை.

ஏனைய தலையீடுகளை நிறுத்தக் கூடிய சக்தி ஆகாய ரீதியில் காட்டப்பட்ட வல்லமைக்கு இல்லாமற் போனது துரதிஷ்டவசமானது.

இந்தியாவை இன்று எதிர் நோக்கியுள்ள சிக்கல் இதுதான்.

யாழ் மக்களுக்கு அதிக நிவாரண உதவியை எப்படி இந்தியா தொடர்ந்து கொடுக்க முடியும்?

ஆகாய ரீதியான நடவடிக்கைக்கு ஒரு வரையறை உண்டு.

தானே பிரகடனப்படுத்திக் கொண்ட இலக்குகளை அடைவதற்கு கடல் மூலமாக சப்ளைகளை அனுப்புவதே சாத்தியப்படக் கூடிய நடைமுறை ஆகும்.

(முற்றும்)

பொய்யாமொழி

குறள்:

ஆற்ருரும் ஆற்றி அடுப இடனறிந்து
போற்ருர்கண் போற்றிச் செயின்.

பொருள் :

[illegible]
வராய்ச் செயலை நெருங்கிச் செல்வராயின்,
[illegible]
தம் எண்ணத்தை இழந்து விடுவார்.

வித்தாரம்

வாரும் மூாளியார்! என்ன பொட்டும் பிறையுமாய்? கோயில் பக்கம் போய் வாறீர் போலை! ஓம், ஓம் சரிதான் இண்டைக்கு ஆனி உத்தரம். விசேஷமான நாள். சிவன் கோயில்களிலை தீர்த்தோற்சவம். நடராசர் அபிஷேகம். ஆனந்தக்கூத்து.

ஆனந்தக்கூத்துப் பாக்கச் சிதம்பரம் எல்லோ போக வேணும் எண்டு என்ரை பேரனுர் அடிக்கடி சொல்லுவார். நான் சின்னப் பிள்ளையாய் இருக்கிற காலத்திலை அவர் அடிக்கடி சிதம்பரம் போய் வந்தவர். எங்களுக்கெல்லாம் நடேசர் கூத்து ஆடிக்காட்டுவார். ஆனந்தக்கூத்தைப் பாக்கவே பக்திப் பரவசம் தானுக வரும். நடராஜர் மாதிரி காலையும் கையையும் உயர்த்தி நின்று ஆடுவதைப் பாக்கிறதே ஒரு தனி ஆனந்தம்.

அவையின்ரை காலத்திலை அடுத்த ஊர்மாதிரி அவை சிதம்பரம் போய் வருவினமாம். இப்பவும் அப்பிடித்தான். ஆனுல் உயிரைப் பணயம் வைச்சுத்தான் சிதம்பரக் கூத்து தனிட்டைப் போக வேணும்.

இடையிக்கை சில காலம் இந்தியா போறது பெரிய கஷ்டமாய் இருந்ததும் உண்டு. செலாவணித் தட்டுப்பாடு. பிரயாணக் கட்டுப்பாடு எண்டும் இருந்தது. அம்மையார் ஆட்சிக்காலத்திலை எண்டு ஞாபகம். காலங்கள் உப்பிடித்தான் மாறி மாறி வரும். எங்கடை பேரன்மார் காலம் மாதிரி எங்கடை பிள்ளையள் காலமும் வரலாம். சிதம்பரத்துக்கு வருஷம் வருஷம் சுகமாசப்போகக் கூடியதாகவும் காலம் மாறலாம். ஆர் கண்டது!

நடேசருடைய ஆனந்தக் கூத்தை ஊழிக்கூத்து எண்டு புராணங்கள் கூறும். முந்தி ஆண்டவன் நடத்தின அந்தக் கூத்தை இப்ப மனுஷர்களுமெல்லே ஆடுகினம்!

வடமராட்சியிலை இராணுவமார் ஆடின ஊழிக்கூத்து பெரும் அனர்த்தங்களை விளைவிச்சிருக்கி. மாடமாளிகைகளும் கூட கோபுரங்களும் நிறைந்த இந்திர லோகம் மாதிரி இருந்த வல்வை நகரம் இப்ப மயான பூமியாய் அல்லோ மாறியிருக்கு. நேபாம் குண்டு அது தான் பீப்பாய்க் குண்டு போட்டு வீடுகளை எரிச்சுப் போட்டுப் பிறகு புல்டோஷர் போட்டு இடிச்சிருக்கினம்.

அங்கை தெற்கிலை லொத்தர் எண்டும் சடன் எண்டும் வாங்கி வீடுகளைக் கட்டுருர் சொந்தக்காரர் லிமிட்டெட். இஞ்சை சனம் தங்கடை சொந்தக் காசிலை கட்டின வீடுகளைத் தரை பட்டமாக்கினம். இது தான் நவீன தர்மிஷ்டம்!

தர்மிஷ்டம் எண்டதும் மந்திரி சபை ஞாபகம் வருகுது. கொழும்புப் பேப்பரிலை இரண்டு நாளைக்கு முன்னம் ஒரு செய்தியைப் படிச்ச பிறகு நீண்ட நேரம் நான் சிந்தனையில் ஆழ்ந்தது உண்டு.

இதயசுத்தியான யுத்த நிறுத்தம் இப்ப தேவை. அரசியல் தீர்வுதான் உகந்தது. அதுக்கு இந்திய உதவி தேவை— எண்டு அமைச்சர் வின்சன்ட் பெரேரா கூறியிருந்தார்.

உண்மை புரியாத ஜனங்களுக்கு மத்தியிலை இப்பிடியும் ஒருத்தர் இருக்கிருரே எண்டு நினைச்சன்.

நேற்றைக்கு அவர் தன்ரை அமைச்சர் பதவியை மட்டுமில்லை எம். பி. பதவியையும் ராஜினுமாச் செய்துபோட்டார்! உண்மையான சனவான்

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

உதயன்

03-07-1987 வெள்ளிக்கிழமை

YOUR FRIENDS IN FINANCE
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA UNICO FINANCE LTD.

பரீட்சை பகிஷ்கரிப்பை மறுபரிசீலனை செய்க!

மாணவர் இளைஞர் பொதுமன்றம் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஜூலை 3

பரீட்சைகளைப் பகிஷ்கரிக்கக் கோரும் மாணவர் முன்னணியின் முடிவுமறுபரிசீலனை செய்யப்படவேண்டும்.

''கற்பதற்காகப் போராடுவோம், போராடுவதற்காகக்கற்போம்'' என்ற தலைப்பில் மாணவர் இளைஞர் பொதுமன்றம் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை விவரம் வருமாறு:-

வடக்கு, கிழக்கு மலையகப் பகுதிகளில் வாழும் தமிழ்பேசும் மாணவர்கள் பெரும் நெருக்கடிக்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

சிங்கள சோவனிச அரசு மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகள் காரணமாக எதிர்காலச் சந்ததி கல்வியை இழந்து வருகிறது.

இதனால் சமுதாயத்தை வழிநடத்தக்கூடிய புத்திஜீவிகளை எதிர்காலத்தில் இழக்க நேரிடும்.

பாடசாலைகள் இராணுவ முகாம்களாக்கப்பட்டுள்ளன. குடாநாட்டில் அண்மையில் நடந்த இராணுவக் கெடுபிடிகளால் பல பாடசாலைக் கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பலர் கைதுசெய்யப்பட்டு பூஸாமுகாமில் வைக்கப்பட்டுள்ளனர். பலமாணவர்களும், ஆசிரியர் சிலரும் சித்திரவதைக்கு உட்பட்டுள்ளனர்.

குறிப்பாக வடமராட்சியில் பாடசாலைகளும், கல்வியும் முற்றாகவே சிதைக்கப்பட்டுள்ளன. கிழக்கு, வன்னிப் பகுதிகளிலும் மாணவர்கள் ஒழுங்காகக் கல்வி கற்க முடியாதுள்ளனர்.

இன்று மலையகத்திலும் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்கள் பயங்கரவாதிகள் என்று கூறிக் கைதுசெய்யப்படுகிறார்கள்.

இப்படியான நெருக்கடி நிலையில் மாணவ முன்னணி ஆறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தை முன்னெடுத்து நடத்துவதை நாம் ஆதரிக்கும் அதேவேளையில் பரீட்சைகளைப் பகிஷ்கரிப்பதென்பதை மறுபரிசீலனை செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இதற்கு மாற்றீடாக பரீட்சைகளைப் பின்போடும்படியும் அனைத்து பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் மற்றும் வெகுஜனஅமைப்புக்கள் ஒன்று சேர்ந்து போராடும்படி வேண்டுகிறோம்.

இப்படி அறிக்கையில் கோரப்பட்டுள்ளது. (இ)

சிப்பாய் காயம்

கொழும்பு, ஜூலை 3

அண்மையில் அல்லை – கந்தளாய் வீதியில் வீதி அமைப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் மேல் போராளிகள் சுட்டதில் ஒரு சிப்பாய் பலத்த காயம் அடைந்தார். (உ-ஐ-எ)

பிரயாண ஒழுங்குகள்
★ குவைத் ★
எம்மிடம் பாஸ்போட் கொடுத்தவர்கள் எல்லோரும் தொடர்பு கொள்ளவும்.
குவைத் Harbourக்கு Agreement செய்தவர்கள் யாவரும் பிரயாணம் மேற்கொள்ள இருப்பதால் உடனே தொடர்பு கொள்ளவும்.
LAND SURVEYORS முற்பணம் கட்டியவர்கள் மட்டும் வந்து சந்திக்கவும்.
பின்வரும் பதவிகட்கும் சொற்ப இடமிருக்கின்றதால் விருப்பமுள்ளவர்கள் வரவும்.
1. Draftsman — 3 இடங்கள் உள்ளன
2. Mechanics — 5 வருட அனுபவம்
3. Auto Electrician — 5 வருட அனுபவம்
4. Heavy Duty Drivers 5 வருட அனுபவம்
5. H. E. Operators 5 Years
6. Labourers
7. Steel Workers 5 Years
குவைத் நாட்டிற்கு Cleaning Labourer தேவையாக இருக்கிறது. உடன் வரவும்.
விபரங்கட்கு:
V. P. Balasubramaniam
(V. P. BALA)
Kondavil West,
School Lane,
KONDAVIL.
Head Office:
Construction & Development Company Ltd.
37, S. DE.S. JEYASINGHE MAWATHA
NUGEGODA.
Labour Licence No. 96



இந்திய நிவாரணப் பொருள்களை விநியோகிப்பதற்காக கடந்த திங்கட்கிழமையன்று வடமராட்சிக்கு விஜயம் செய்த இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் கரவெட்டி சென். அந்தனீஸ் தேவாலய அகதிமுகாமில் வைத்து அகதிகள் 'நாசகாரி' ஒன்றின் மிச்சத்தைக் காட்டினார்கள்.

ஆம்! கரவெட்டிப் பகுதியை நோக்கி ஏவப்பட்டு, அங்கு விழுந்து வெடித்தபோது பெரும் சேதத்தை விளைவித்த ஷெல் குண்டின் எஞ்சிய பாகம் தான் அது.

அதனைப் பார்த்து அதிர்ச்சியடைந்த நிலையில் காணப்படும் இந்திய செஞ்சிலுவைப் பிரதிநிதி லெப். கேர்ணல் கே. வேணுகோபாலை மேலே உள்ள படத்தில் காணலாம். (படம்:- ஜெயம்)

பரீட்சை பகிஷ்கரிப்பு: ஆராய இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

ஆகஸ்டில் நடைபெறும் ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றுவது சம்பந்தமான முடிவுகளை மேற்கொள்வதற்கு இன்று முக்கிய கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

இன்று பிற்பகல் 3மணி அளவில் யாழ் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கில் இந்தக் கூட்டம் நடைபெறும்.

சகல உயர்தரப் பாடசாலைகளினதும் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் பிரதிநிதிகள் ஐவர், பத்து மாணவ பிரதிநிதிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு மாணவர் நலன்கள் பேண ஒத்துழைக்குமாறு கூட்டத்தின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். (உ)

வளலாயில்———

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

யில் தாழப்பறந்து றொக்கட் மற்றும் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டன.

இந்த மோதலின் போது படையினர் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டதாகவும், தமது தரப்பில் மூவர் காயமடைந்ததாகவும் புலிகள் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிவாரணப் பொருள்களை இறக்குவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக, காங்கேசன் சென்ற இந்திய தூதரக உயரதிகாரி ஒருவரே ஆயுதங்கள் இறக்கப்படுவதை அவதானித்தார். (உ-10)

வித்தாரம்..

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

பாத்தியே.

கொழும்பு மாநகர சபை வேட்பாளர் பட்டியல்லை அவரது ஆதரவாளர்களுக்கு இடம் குடுக்கயில்லையாம்.

''உவர் மந்திரி சபையுக்கை ஜே. ஆர். பிரிவு எல்லே. அப்பிடி எண்டால் இப்ப அங்கை அந்தப் பிரிவுக்குச் செல்வாக்குக் குறைஞ்சு வேற பிரிவு எதுக்கும் கை ஓங்குதோ'' எண்டு நண்பர் ஒருவர் இப்பதான் கேட்டு விட்டுப் போறார்!

வவுனியா - - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

களை ஆதார பூர்வமாகக் காட்டி நிரூபிக்க விரும்பி தங்களுடன் வருமாறு தேரரை அழைத்தனர்.

தேரரும் அழைப்பை ஏற்றுக் கொண்டார். பின்னர் தேரரும் ஏனையோரும் மந்திகை ஆஸ்பத்திரிக்குச் சென்றனர். தேரரைக் கண்டு பாதிக்கப்பட்டவர்கள் அழுதனர். தேரரும் கண்கலங்கினார்.

ஆஸ்பத்திரியில் எரிகாயங்களுக்காளாகி சிகிச்சை பெறும் ஊர்வாசிகள், விசேடமாக பெண்கள் தேரருக்கு காண்பிக்கப்பட்டனர்.

எரிகுண்டுகள் விமானங்களில் இருந்து போடப்பட்டதால் இவர்கள் காயமடைந்தனர் என்று தேரருக்குக் கூறப்பட்டது.

தேரர் அதிர்ச்சி

வடமராட்சிப் பகுதியில் நடந்த சம்பவங்களைக் கேள்விப்பட்டும் காயம் அடைந்தவர்களைப் பார்த்தும் தேரர் அதிர்ச்சியடைந்தார், வேதனைப்பட்டார்.

ஊர்ப்பிரமுகர்களிடம் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொண்டார்.

ஊர்ப்பிரமுகர்கள் மத்தியில் உரையாடிய போது தேரர் சொன்னதாவது:-

''எனக்கு அரசியல் இல்லை. [illegible] பாட்டுடன் நான் இங்கு வரவில்லை. பௌத்த 'சமய வழியில் நடப்பவன் நான். அமைதியும் சமாதானமும் நிலவ வேண்டும் என்று ஆசைப்படுகின்றவன் என்ற முறையில் இங்கு வந்திருக்கின்றேன்.

தமிழ்ப் போராளிகள் மத்தியில் செல்வாக்குப் பெற்ற பௌத்தபிக்கு என்ற பேர் எனக்கு உண்டு.

இதனால் சிங்கள மக்கள் மத்தியில் என் மீது அவநம்பிக்கையும் உண்டு.

என்னாலான உதவிகளை தமிழர்களுக்குச் செய்ய ஆயத்தமாக உள்ளேன். பூஸா முகாமில் உள்ள தமிழர்களை விடுவிக்க என்னாலான நடவடிக்கைகளை எடுப்பேன். உரியவர்கள் என்னுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள முடியும்.

வடமராட்சியில் பாதிக்கப்பட்டபகுதிகளை நான் நேரடியாகச் சென்று பார்வையிட உள்ளேன்.

இப்படி வண. சியம்பலகஸ்வெவதேரர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளை வந்து பார்வையிடுவதற்கு தேரருக்கு ஊர்ப் பிரமுகர்கள் சம்மதம் அளித்தனர்.

தேரருடன் வவுனியா சர்வோதய அமைப்பாளர் திரு. அபயவர்த்தனா மற்றும் இரண்டு பேர் வந்திருந்தனர்.

தேரர் தற்போது மந்திகை [illegible] தங்கியிருக்கின்றார். (இ-எ)

கண்ணிவெடியில் சிக்கி 3 ஊழியர் மரணம்

கொழும்பு, ஜூலை 3

மன்னாரில் நேற்று நடைபெற்ற கண்ணிவெடித் தாக்குதலில் அரச ஊழியர்கள் மூவர் கொல்லப்பட்டதாக அரச அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

கொண்டைச்சி முந்திரிகைப் பண்ணையைச் சேர்ந்த இந்த மூன்று ஊழியர்களும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள். ஜீப் ஒன்றில் சென்று கொண்டிருக்கையில் அவர்கள் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்கானதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

ராஜீவ் - கோர்பச்சேவ் முதல் சுற்றுப் பேச்சு

மாஸ்கோ, ஜூலை 3

ரஷ்யாவுக்கு நேற்று விஜயம் செய்த இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி ரஷ்யத் தலைவர் கோர்பச்சேவுடன் நேற்று முதலாவது சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார்.

பேச்சுக்கள் கிரெம்ளின் மாளிகையில் நடைபெற்றன.

பேச்சுக்கள் விரிவான அடிப்படையில் இடம்பெற்றன.

திரு. காந்தி மாஸ்கோ விமான நிலையத்தில் ரஷ்யப் பிரதமரினால் வரவேற்கப்பட்டார். (உ-எ)

இங்கிலாந்து சரிந்தது

லண்டன், ஜூலை 3

நேற்று லீட்ஸில் ஆரம்பமான இங்கிலாந்து – பாகிஸ்தான் மூன்றாவது கிரிக்கெட் டெஸ்டின் முதலாம் நாள் ஆட்டத்தின்போது இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் மளமளவென்று இழந்து 136 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

நேற்று மாலை ஆட்டத்தின்போது ஒரு கட்டத்தில், பாகிஸ்தான் அணி தனது முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட் இழப்புக்கு 22 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. (உ)

உடுப்பிட்டி - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

வந்து புலிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் கடும் சமர் நடைபெற்றது.

சற்று நேரத்தில் தொண்டமனாறில் இருந்து ஹெலிக்கொப்டர் ஒன்று அந்த இடத்திற்கு விரைந்து வந்தது.

ஹெலிக்கொப்டரில் இருந்து சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. புலிகளும் ஹெலிக்கொப்டரை நோக்கிச் சுட்டனர்.

இராணுவத்தினர் பின்னர் வல்வெட்டித்துறை முகாம் நோக்கித் திரும்பிச்சென்றனர்.

புலிகள் தரப்பில் சேதம் இல்லை என்று தெரிகின்றது. (உ-எ)

பூஸா - - - -

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

திரவதை செய்யப்பட்டும் இன்னும் விசாரிக்கப்பட்டு வருகின்றனர் என்று கூறினார்.

இந்த இளைஞர் தமக்கு விசேஷமாக வழங்கப்பட்ட அடையாளக் கார்ட்டையும் எமது செய்தியாளரிடம் காண்பித்தார்.

முழுப் பெயர், வேறு பெயர், முகவரி, தேசிய அடையாளக் கார்ட் இலக்கம் ஆகிய விவரங்கள் அடையாளக் கார்ட்டில் உள்ளன.

வடமராட்சி சிவில் இணைப்பு அதிகாரியினது ஒப்பமும் அடையாளக் கார்ட்டில் உள்ளது.

''வடமராட்சி- தற்காலிக அடையாளக் கார்ட்'' என்று எழுதப்பட்டுள்ளது.

ஒரு பக்கத்தில் ஷேர்ட் கழற்றப்பட்ட நிலையில் எடுக்கப்பட்ட புகைப்படமும் இணைக்கப்பட்டுள்ளது. (இ-119)

ஸ்ரீலங்கா சங்கம் திருப்தி

கொழும்பு, ஜூலை 3

யாழ் குடா நாட்டில் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் ஆற்றிவரும் பணி குறித்தும் –

இந்திய நிவாரண உணவு விநியோகம் குறித்தும் ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கம் திருப்தி தெரிவித்திருக்கிறது. (உ-எ)

நவர்ட்டிலோவா அரையிறுதியில்

லண்டன், ஜூலை 3

விம்பிள்டன் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவிற்கான வெற்றிக் கிண்ணத்தை மீண்டும் தன்னுடன் தக்க வைத்துக்கொள்வதற்காக சளைக்காமல் விளையாடிக் கொண்டிருக்கும் மார்ட்டினா நவர்ட்டிலோவா நேற்று போட்டியின் அரை இறுதியில் விளையாடும் தகுதியைப் பெற்றார்.

மற்றொரு சிறப்புத் தாரகையான கிறிஸ் எவர்ட்லோயிட்டை அவர் நேற்று தோற்கடித்தார். (உ)

இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 3

மோட்டார் சைக்கிளும் தட்டிவானும் மோதிக் கொண்டதில் இளைஞர் ஒருவர் பலியானார். மற்றொருவர் காயமடைந்தார்.

நேற்றுக் காலை பத்து மணி அளவில் பண்டத்தரிப்புக்கும் சித்தன்கேணிக்கும் இடையில் இச் சம்பவம் நடைபெற்றது.

மக்களின்- - -

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்கும் முயற்சிதான் இது என நான் நினைக்கிறேன்.

எம்மைப் பொறுத்தவரை நாம் அத்தகைய தேர்தல் எதிலும்–தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வரை –பங்கு பற்ற மாட்டோம்.

இந்திய நிவாரணம்

இந்தியா ஈழத்தமிழருக்கு அளித்த நிவாரண உதவியை நாம் முற்றும் முழுதாக வரவேற்கிறோம்.

பட்டினியால் வாடும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை எந்தச் சர்வதேச சட்டமாவது தடுத்தால் அது சட்டம் அல்ல என்பதுதான் எனது நிலைப்பாடு.

தமிழீழ கோரிக்கையை முதன் முதலில் மக்கள் முன்வைத்தவர்கள் நாங்களே.

ஆனால் அதற்கு மாறாக-தமிழ் மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக் கூடிய ஒரு தீர்வு முன்வைக்கப்படுமானால்—

அது எமது மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடியது என நாம் கருதினால்—

அதை எமது மக்கள் முன் வைத்து, அவர்களை ஏற்கச் செய்து, அதை நடைமுறைப்படுத்துவோம். இதுதான் கூட்டணியின் நிலை.

டிசம்பர் 19 யோசனை

டிசம்பர் 19 யோசனையை பேச்சுவார்த்தைக்கான 'ஆரம்பக் கட்டமும் அடிப்படையான சில கருத்துக்களும்' என்றே இந்தியா கூறுகிறது.

ஆனால் இலங்கை அரசு அது பேச்சுவார்த்தைக்கான அடிப்படை என்று மட்டுமே தெரிவித்து வருகிறது.

இந்தியா கூறும் இந்த விளக்கத்தின் அடிப்படையில் இதனை எப்படி முன்னேற்றலாம் என்பது குறித்து பேசுவதற்கு நாம் தயார்.

ஆனால் இன்றைய சூழ்நிலையில் எமது மக்கள் மீது இலங்கை அரசு தீவிரமாக – கொடூரமாகப் போர் தொடுத்திருக்கிறது.

அந்த நிலையை மாற்றி அங்கு மக்கள் சமாதானமாகவும் சுமுகமாகவும் வாழும் பாதுகாப்பான நிலை உறுதிசெய்யப்படும் வரை நாம் அந்தப் பேச்சுவார்த்தைக்கும் செல்லத் தயாரில்லை.

– இப்படி அவர் கூறினார். (அ-உ)

நீத்தார் பட்டியல்

அ த செல்லத்துரை

அ. த. செல்லத்துரை இளைப்பாறிய ஆசிரியர் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. அன்னார் சிவபதமெய்திவிட்டார்.

இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும் தங்கரத்தினம், இராசலட்சுமி (ஆசிரியை இளவாலை கன்னியர் மடம்), பத்மநாதன் (U. K.), யோகராஜா, சரோஜினிதேவி (கனடா), நிர்மலாதேவி(U.K.), நந்தகுமார் (U.K.) ஆகியோரின் அன்புத் தந்தையும். ஜெயவீரசிங்கம் (R. V. D. B. உடவளவை), சிவநேசன் (மக்கள் வங்கி சுன்னாகம்), தவராஜா (கனடா), பத்மாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும், சகிலா, தீபன், திலீபன், சுஜன், ரஞ்சன், கரன், தமிழினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் இன்று (03-07-1987) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

ந. ஜெயவீரசிங்கம்

(1257)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 03-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Friday July 03, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87